**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**
**CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.31/2023**
**Sessions :**
**Deposition of Witness for : PW1 , LW1**

| | |
|---|---|
| Name | : திரு.சரண்ராஜ் |
| Father's/Husband Name | : திரு. ஏழுமலை |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 23rd day February, 2026**

( எதிரி தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்)

**<u>முதல் விசாரணை</u>:-**

1. நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். சம்பவ சமயத்தில் எனது ஊரான புன்னமை கிராமத்தில் வசித்து வந்தேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

2. கடந்த 09.07.2020 ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் எங்கள் வீட்டில் எனது அப்பா ஏழுமலை என்பவர் எங்கள் வீட்டுக்கு எதிரே உள்ள மரத்தடியில் உட்கார்ந்திருந்தார். அப்போது எதிரிகள் மூவரும் வந்து எனதுஅப்பாவை மூன்று பேரும் கட்டையால் அடித்தார்கள். பின்பு எனது அப்பாவின் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது அடிப்பட்ட எனது அப்பா மயக்க நிலையில் இருந்தார். பின்பு நான் சத்தம் போட்டு அருகில் இருந்த மணிகண்டன், எனது தம்பி ஸ்ரீராம், சந்திரன், ஆனந்த் ஆகியோர்கள்

ஓடிவந்து சிகிச்சைக்காக எனது அப்பாவை பவுஞ்சூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். பின்பு மேல்சிகிச்சைக்காக 108 ஆம்புலன்சு மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அவர்கள் எனது அப்பாவை அடித்த விவரம் இரண்டு நாட்கள் கழித்து தான் தெரியும். எதிரிகள் அவரது உறவினர்களான ரமேஷ் என்பவரிடமிருந்து நிலத்தை வாங்கியதற்காக முன்விரோதம் கொண்டு எனது அப்பாவை அடித்தார்கள் என்று தெரிந்து கொண்டேன். மேற்படி சம்பவம் தொடர்பாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்ககோரி புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). வழக்கு குறித்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிஸ் என்னை சம்பவம் நடந்த அன்றே காவல் நிலையத்திலும் விசாரித்தார்கள், எங்கள் வீட்டின் அருகே வந்து விசாரணை செய்தார்கள். போலிஸ் என்னை விசாரிக்கும்போது நான் மட்டும் தான் இருந்தேன். வழக்கு புகாரை நான் தான் எழுதினேன். நான் எனது அப்பாவின் அலறல் சத்தம் கேட்டு தான் வெளியே வந்து பார்த்தேன் என்றால் சரிதான். மணிகண்டன், ஆனந்தன் ஆகியோர் என்னுடன் ஓடிவந்தனர் என்று புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் சொன்னேனா என்றால் சொன்னேன். சம்பவத்தின் போது நான் வீட்டுக்குள் இருந்தேன் என்றும் எனது அப்பாவின் அலறல் சத்தம் கேட்டது என்று புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் இரண்டு நாள் கழித்து தான் போலிசில் புகார் கொடுத்தேன் என்றால் 09.07.2020 அன்று புகார் கொடுத்தேன்.

ஆஜர் எதிரிகளை தெரியும் அவர்கள் எங்கள் ஊர்காரர்கள் தான். எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே ஏற்கனவே சொத்து தொடர்பான பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை. எதிரிகள் எங்களுக்கு எதிராக புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நாங்கள் தான் எதிரிகளை அடித்தோம் என்றாலும் எதிரிகள் எங்களுக்கு எதிராக கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ஆஜர் எதிரிகளுக்கும், இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது

**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-Tmt.N.Valliamma

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur (FAC)

**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**
**CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.31/2023**
**Sessions :**
**Deposition of Witness for : PW2 , LW2**

| | |
|---|---|
| Name | : திரு.ஏழுமலை |
| Father's/Husband Name | : திரு. ராமசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 23rd day February, 2026**

( எதிரிகள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்கள்)

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது புன்னமை கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

2. கடந்த 09.07.2020 ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் எனது வீட்டருகே நான் இருந்தபோது ஆஜர் எதிரிகள் மூவரும் வந்து மூன்று பேரும் என்னை கொம்பால் என்னை அடித்தார்கள். அதில் எனக்கு தலை, மூக்கு, கைகளில் காயம் ஏற்பட்டது. மூக்கில் இருந்து ரத்தம் வடிந்தது. பின்பு எனது சத்தம் கேட்டு அ.சா.1 எனது மகன், மணிகண்டன், ஆனந்த் மற்றும் சந்திரன் ஆகியோர்கள் ஓடி வந்து சண்டையை விலக்கிவிட்டார்கள். பின்பு காயம்பட்ட என்னை பவுஞ்சூர் அரசு மருத்துவமனைக்கு சென்று எனக்கு முதலுதவி

அளித்த பின்பு மேல்சிகிச்சைக்காக 108 ஆம்புலன்சு மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மேற்படி சம்பவம் தொடர்பாக அ.சா.1 எனது மகன் புகார் செய்திருந்தார். வழக்கு குறித்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் சம்பவம் நடந்த மறுநாள் காவல் நிலையத்திலும், வீட்டின் அருகே வைத்து என்னை விசாரணை செய்தார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் அவர்கள் எங்கள் ஊர்காரர்கள். எதிரிகள் என்னை அடித்தபோது வீட்டின் அருகே இருந்து வயலில் இருந்தேன். இந்த விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். மணிகண்டன், ஆனந்த் மற்றும் சந்திரன் மற்றும் எனது மகனும் வந்து பார்த்தார். எதிரிகள் அடித்ததில் எனக்கு மூக்கு, தலை, கை ஆகிய இடங்களில் அடிப்பட்டது என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். பட்டியல் சாட்சிகள் 3 முதல் 5 வரையானவர்கள் எங்களது ஊர்காரர்கள். எதிரிகளை நாங்கள் அடித்ததாக புகார் கொடுத்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் தான் எதிரிகளை அடித்தோம் என்றாலும் எதிரிகள் எங்களுக்கு எதிராக கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ஆஜர் எதிரிகளுக்கும், இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது

**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-Tmt.N.Valliamma

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur (FAC)